THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Friday, the 31st January 1972.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Coimbatore Institute of Technology

* 66 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Coimbatore Institute of Technology was closed until further orders about 12th August 1971; and

(*b*) if so, the reasons therefor?

கோயம்புத்தூர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மறு ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரை, கோயம்புத்தூர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், 1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் நாள் அளவில் மூடப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பட்டயப் பொறியாளர்களுக்காக பகுதிநேர பொறியியல் பட்டப் படிப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதை எதிர்த்து பொறியியல்/கல்லூரி மாணவர்கள் 10-8-1971 லிருந்து 18-8-1971 வரை வகுப்புகளுக்கு செல்லாமல் இருந்தனர். பின்பு இக்கிளர்ச்சி நின்று விட்டது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா அல்லது அவர்களாகவே விட்டுவிட்டார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பகுதிநேர பொறியியல் பட்டப் படிப்பு பயிற்சி வகுப்புக்களைத் துவக்கி தாங்களே பயிற்சி தருவார்களானால், அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படும் என்ற அச்சத்தின் அடிப்படையில் அவர்கள் கிளர்ச்சிகள் செய்தார்கள். ஆனால் எந்த வகையிலும் அவர்களுக்குக் கிடைக்கிற எத்தகைய வேலை வாய்ப்பும் பாதிக்கப்படாது என்றும் ஏற்கனவே வேலை பார்க்கிறவர்கள் தங்களது தகுதியை உயர்த்திக் கொள்ள பகுதி நேரப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்றும் சொல்லப்பட்டது. என்றாலும் அவர்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் சில மாற்றங்கள் செய்யப் பட்டிருக்கின்றன. ஐந்தாண்டுக் காலம் பணியாற்றியிருந்தால், அவர்களைப் பகுதி நேரப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றும் ஆண்டுக்கு இருமுறை

[31st January 1972

தேர்ந்தெடுத்து மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று இருந்ததை ஆண்டுக்கு ஒருமுறை சேர்த்துக்கொண்டால் போதுமென்றும் முடிவு செய்யப் பட்டது. 470 இடங்கள் ஏற்கனவே பல்கலைக்கழக அனுமதியோடு பெறப் பட்டன. மேற்கொண்டு 120 இடங்கள் பெறப்பட்டன. அப்படிப் பெறப்பட்ட 120 இடங்கள் நிரப்பப்பட வேண்டாமென்ற முடிவுக்கு வந்ததும் அவர்களுக்கு ஓரளவுக்குத் திருப்தி ஏற்படும் முறையில் வகுத்துக்கொண்டதன் காரணமாக அவர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர்.

Revised scales of pay for the Headmasters of Madras ***Corporation***

* 67 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Corporation of Madras has not paid (i) Revised scales of pay as per the recommendations of the Second Pay Commission to the Headmasters of the Corporation Primary and Middle Schools, (ii) Headmaster's Allowance to Headmasters of Primary Schools and (iii) B.T. scales of pay to qualified graduate Headmasters of Middle Schools; and

(*b*) if so, the action taken or proposed to be taken by the Government in the matter?

சென்னை மாநகராட்சி தலைமை ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை மாநகராட்சி, (1) இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளையொட்டி திருத்தி அமைக்கப்பட்ட சம்பள விகிதங்களை மாநகராட்சி தொடக்க, இடைநிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்குக் கொடுக்கவில்லை என்பதும் (2) தொடக்கப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் படி கொடுக்கவில்லை என்பதும் (3) நடுத்தரப் பள்ளிகளின் தகுதி பெற்ற பட்டதாரித் தலைமை ஆசிரியர்களுக்கு பி. டி. சம்பள விகிதங்களை கொடுக் கவில்லை என்பதும் உண்மையா?

(இ) ஆமெனில், இப்பொருள் குறித்து அரசு எடுத்துக்கொண்ட அல்லது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, அவர்களுக்குரிய சிறப்பு ஊதியம் எப்போது கொடுக்கப்பட்டது என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். ஏனென்றால் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற புகார் வந்ததன் பேரில்தான், இந்த வினாவை எழுப்பினேன். மாநகராட்சி எப்போது அவர் களுக்குக் கொடுத்தது?